# 09 கந்தபுராணம்

## «m]¨ £h»®

வேத உண்மைகளை விளக்குபவை புராணங்கள் ஆகும். புராணங்கள் பதினெட்டாகும். அவற்றில் சைவ புராணம் சிவனின் பரத்துவ நிலையை எடுத்துரைப்பதாகும். சாங்கிதை என்னும் பல பெரும் பிரிவுகளும் பல இலட்சம் கிரந்தங்களும் கொண்ட நூலாகும். அவற்றில் சங்கர சங்கிதையில் சிவரகசியம் என்னும் உட்பிரிவில் உரைக்கப்பட்ட செய்தி தமிழிலே கந்தபுராணமாகக் கூறப்பட்டது. புராணம் என்பதற்கு பழைமையானவை என்னும் பொருளுள்ளது. போதனை என்னும் வழியாகவே புராணக் கதைகள் கூறப்படுதல் மரபாகும்.

தமிழிலே தோன்றிய கந்தபுராணமானது கச்சியப்ப சிவாசாரியாரால் பாடப்பெற்றது. இவர் காந்திக் குமரக் கோட்டம் என்னும் கோயிலில் முருகனைப் பூசித்து வந்தவர். ஆரியம் தமிழ் இரண்டிலும் புலமை மிக்கவர். முருக பக்தரான இவர், முருகன் ''திகட சக்கரம்'' என அடியெடுத்துக் கொடுக்கப்பாடினார் என்பது வரலாறாகும். வடமொழிக் கதையைத் தமிழ் மரபிற்கு ஏற்றவாறு பெருங்காப்பியமாகப் பாடி முடித்து முருகன் சந்நிதியிலே அரங்கேற்றினார். நூலில் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளுள்ளன. உட்பிரிவாகப் படலம் என்னும் பகுப்புடன் 10 000 த்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளன. சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது. காவிய இலக்கணம் முற்றும் கொண்டது. கதையிடையே அறநெறிகளையும் சைவ சித்தாந்த உண்மைகளையும் விளக்கிச் செல்வது. கந்த புராண யுத்தகாண்டத்தில் உள்ளடக்கப்பட்டதே மீட்சிப்படலமாகும். இம்மீட்சிப் படலம் பின்வரும் காட்சி களைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது. வேலாயுதக் கடவுள் வீரவாகு தேவரை அன்புடன் நோக்கி, இந்திரன் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறையினின்றும் மீட்டருள்வாய் எனக் கூற, அவரும் சென்று அசுரர்களை வென்ற செய்தியைக் கூறிகின்றது.

அனைவரும் மகிழ்ச்சியடைந்து, போர்க்களத்தை அடைந்து, முருகனை வணங்கி நின்றனர். சயந்தன் இந்திரனை வணங்கினான். யுத்த களத்தில் இறந்த பூத கணங்களும் உயிர்பெற்று முருகனை வணங்கினர். முருகன் கட்டளைப்படி வீரமகேந்திர, அவுணரின் தீவுகளும் வருணனால் அழிக்கப்பட்டன. முருகன் இவர்களை மீட்டு, ஜயநதி மலை என்னும் சிறப்பு மிக்க பதியைச் சென்றடைகிறார். முருகனுக்கு தேவர்கள் பூசை செய்ய விரும்பினர். முருகன் தேவதச்சனைக் கொண்டு திருக்கோவில் நிறுவினார். இக் கோயிலில் சிவலிங்கம் வைத்து ஒவ்வொரு மலராக அர்ச்சித்துக் கொண்டே வந்தார்.

மால், அயன், பிரம்மா முதலிய தேவர்கள் இந்த அர்ச்சனைக் கண்டு மகிழ்ந்தனர். காட்சி அர்ச்சனையின் போது **'முருகன்'** எனக் கூவினர். அப்போது கையிலெடுத்த பூவுடன் முருகன் காட்சி கொடுத்தான். திருச்செந்தூரில் இன்னும் இக்காட்சி இருப்பதாகக் கூறுவர். பூசை புரிந்த பெருமான் தேவர்களின் பூசையையும் கண்டு ஆனந்தமடைகிறார். தேவர்களிடம் முருகன், ஏதும் குறை இருந்தால் கேளுங்கள் என வேண்டினார். எமக்குக் குறையொன்றும் இல்லை தங்கள் திருவடியில் நீங்காத அன்பைத் தந்தருள வேண்டும் எனக்கேட்க, எம்பெருமானும் அவ்வாறே செய்தருளினார். இவ்வாறு இம்மீட்சிப்படலக் காட்சிகள் செல்கின்றன. இதனடிப்படையில் இப்படலத்தில் உள்ள பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றிலுள்ள பக்திச்சுவை, பொருட்சுவை என்பவற்றை கற்றறிவது சிறந்ததாகும்.

## «m]¨ £h»®

1.மற்றது காலத்து மணிதூங் கியபசும்பொன்
பொற்றை புரையுமு பொறிமஞ்ஞை மீதுவைகும்
வெற்றி நெடுவேற்கை விமலன் விறலோனைப்
பற்றி னொடுநோக்கி இனைய பகர்கின்றான்.

**பொருள் -** அச்சமயத்தில், மணி தங்கிய பசுமையான பொன் மலை போன்ற புள்ளியுடைய மயிலின் மீது எழுந்தருளியிருக்கும் வெற்றியுடைய நீண்ட வேல் ஏந்திய குற்றமற்ற முருகப்பெருமான், வீரவாகுதேவரை விருப்புடன் பார்த்து இவற்றைத் திருவாய் மலர்ந்தருளினார்.

2.கேட்டி இதுவீர கெடலுற்ற வெஞ்சூரன்
ஈட்டு திருவென்ன இருஞ்சிறையின் முன்வைப்ப
வாட்டமுறு சயந்தன் வானோர் தமைஎல்லாம்
மீட்டு வருதி எனவே விளம்பினனால்.

**பொருள் -** 'வீரவாகுவே, இதைக் கேட்பாயாக. அழிந்த கொடிய சூரபன்மனால் ஈட்டப்பட்ட செல்வத்தைப் போலப் பெரிய சிறையிலே முன்னமே வைக்க வருந்திய சயந்தனையும் தேவர்கள் எல்லாரையும் மீட்டு வருவாயாக எனக் கூறியருளினார்.

3.குன்றம் எறிந்த குமரன் இது கூறுதலும்
நன்றி தெனவே தொழுது நனிமகிழ்ந்து
வென்றி விடலை விடைபெற்றுப் போர்க்களத்தின்
நின்றும் அவுணன் நெடுநகரத் தேகினனால்.

**பொருள் -** கிரவுஞ்ச மலையைப் பிளந்த குமரப் பெருமான் இதைக் கூறவும், வெற்றிபொருந்திய வீரவாகு தேவர், 'நல்லது' என்று வணங்கி விடைபெற்றுப் போர்க்களத்தை விட்டு விலகிச் சூரபன்மனின் பெரிய நகரத்துக்குள் சென்றார்.

4. மீது படுதிண்டோன் விடலை அறம்திறம்புங்
கோது படுதீயோர் குழீஇயநக ருள்புக்குத்
தாது படுதண்டார்ச் சயந்தன் அமரருடன்
தீது கடுவெய்ய சிறைக்களத்துச் சென்றனனே.

**பொருள் -** மேல் எழுந்த திண்மையான தோள்களையுடைய வீரவாகுதேவர், அறநெறியினின்று தவறிய குற்றம் பொருந்திய அசுரர் இருந்த நகரத்துக்குள் புகுந்து, மகரந்தம் பொருந்திய குளிர்ந்த மாலையணிந்த சயந்தன், தேவர்களுடன் வருந்திக் கிடக்கின்ற கொடிய சிறைக்குச் சென்றார்.

5. செல்லும் விறலோன் திறத்தை நனிநோக்கி
அல்லல் அகலும் அரிசுதனும் வானோர்கள்
எல்லவரும் அற்புதநீர் எய்திப் பதம்பூட்டும்
வல்லி பரிய மலர்க்கை குவித்தனரே.

**பொருள் -** அவ்வாறு போன வீரவாகுதேவரின் தன்மையைப் பார்த்துத் துன்பம் நீங்கிய இந்திரனின் மகனான சயந்தனும், தேவர் அனைவரும் வியப்பு அடைந்து காலில் இடப்பட்ட விலங்கைத் தடவிய கைகளைக் குவித்து வணங்கினர்.

6. செங்கை குவித்தே திறலோய் சிறைப்பட்ட
நங்கள் துயர் அகற்ற நண்ணினையோ நீயென்றே
அங்கவர்கள் எல்லோரும் ஆர்த்தெழுந்து கூறுதலும்
எங்கள் பெருமான் இளவல் இதுபுகன்றான்.

**பொருள் -** சிவந்த கைகளைக் குவித்து, 'வீரவாகு தேவரே, நீவிர் எங்கள் துன்பத்தை நீக்க வந்தீரோ?' என்று கூறி அனைவரும் ஆரவாரித்து எழுந்து கூறவும், அத்தேவர்களைப் பார்த்து வீரவாகுதேவர் இதனைக் கூறலானார்.

7. வம்மின்கள் வம்மின்கள் வானத்தீர் எல்லீரும்
நும்மை அயர்வித்த நொறில்பரித்தேர் வெஞ்சூரை
அம்ம அவுணர் அனிகத் துடன்எங்கோன்
இம்மெனவே வேலால் இதுபோழ் தெறித்தனனே.

**பொருள் -** 'தேவர்களே, எல்லாரும் வாருங்கள்! வாருங்கள்! உங்களை வருத்திய வேகம் பொருந்திய குதிரை பூட்டிய தேரையுடைய கொடிய சூரபன்மனை அவன் படைகளுடன் எம் இறைவன் விரைந்த வேற்படையினால் இப்போது அழித்தருளினார்.'

8.என்றாங் கிசைப்ப இமையோர் அதுகேளாப்
பொன்றாது முத்தி புகுந்தோர் எனமகிழ்ந்து
வன்தாள் மிசைப்பிணித்த வல்லிகளின் மூட்டறுத்துச்
சென்றார் அவுணன் திருநகரம் நீங்கினரே.

**பொருள் -** என்று வீரவாகுதேவர் சொன்னார். தேவர்கள் அதனைக் கேட்டு இறவாது வீடுபேறு அடைந்தவரைப் போல மகிழ்ச்சி அடைந்து, வலிய கால்களில் பூட்டப்பட்ட விலங்குகளின் மூட்டினை அறுத்து எறிந்து, அசுரனான சூரபன்மனின் அழகிய நகரத்தை நீங்கிச் சென்றனர்.

வேறு

9.நுணங்கு நூலுடை இளையவன் முன்செல நொய்தென்ன
அணங்கி னோருடன் சயந்தனும் தேவரும் அவண்நீங்கிக்
குணங்கர் ஈண்டிய களத்திடை நணுகியே குமரன்தான்
வணங்கி மும்முறை புகழ்ந்தனர் திகழ்ந்தனர் மகிழ்வுற்றார்.

**பொருள் -** அசையும் பூணூல் அணிந்த வீரவாகுதேவர் முன்னால் செல்ல, விரைவாகத் தேவமங்கையருடன் சயந்தனும் தேவர்களும் அந்த இடத்தை விடுத்துப் பேய்கள் நெருங்கிய போர்க்களத்தில் சென்று, குமரப் பெருமானின் திருவடிகளை மூன்று முறை வணங்கிப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

10.குன்றெ றிந்தவன் அமரர்பால் பேரருள் கொடுநோக்கி
நன்றி யில்லவன் சிறையிடைப் பலபகல்
துன்று பேரிடர் மூழ்கினீர் ஈங்கினித் துயரின்றி
என்றும் வாழ்குதிர் துறக்கமேல் வெறுக்கையில் இருந்தென்றான்.

**பொருள் -** கிரவுஞ்ச மலையை அழித்த குமரப்பெருமான் தேவர்களை அருளுடன் பார்த்து, 'நன்றி இல்லாத சூரபன்மனின் சிறையில் பலகாலம் இருந்தீர்கள் பெரிய துன்பத்துள் முழுகினீர். இனித் துன்பம் இல்லாமல் சுவர்க்கத்தில் செல்வத்துடன் இருந்து வாழ்வீராக!' என்று அருள் செய்தார்.

11.கந்தன் இம்மொழி வழங்கலும் கடவுளர் களிப்பெய்தி
உய்ந்த னம்மெனப் பின்னரும் வணங்கினர் உதுகாணம்
முந்து தொல்லிடர் நீங்கியே புந்தியில் முதமெய்தி
இந்தி ரன்திருப் பெற்றிடு ஞான்றினும் இனிதுற்றான்.

**பொருள் -** முருகப்பெருமான் இத்தகையவற்றைக் கூறவும், தேவர்கள் மகிழ்ந்து, 'இனி, நாம் பிழைத்தோம்' எனப் பின்பும் வணங்கினர். அவர்கள் பின்னரும் வணங்கிய அவனைப் பார்த்து, முன்னிருந்த பழைய துன்பம் ஒழிந்து, மனத்தில் மகிழ்ச்சி அடைந்த நாளைவிட அதிக மகிழ்ச்சி அடைந்தான்.

12. கண்ட னன்றொழு மைந்தனைப் புல்லினன் களிப்புள்ளம்
கொண்ட னன்புறம் நீவினன் பல்லுகங் கொடியோன்செய்
ஒண்ட ளைப்புகுந் தெய்த்தனை போலும்என் றுரைசெய்யா
அண்டர் யாரையும் முறைமுறை தழீஇயினன் அமரேசன்

**பொருள் -** இந்திரன் தன்னை வணங்கிய சயந்தனைப் பார்த்து அணைத்து மகிழ்ந்து முதுகினைத் தடவிப் 'பல காலம் நீ கொடிய சூரபன்மன் அமைத்த ஒள்ளிய சிறைச் சாலையுள் புகுந்து வருந்தினை அல்லையோ!' என்று சொல்லி மற்றத் தேவர்களையும் முறை முறையே தழுவினான்.

13. செற்ற மேதகு மவுணர் தங்காவலன் செருவத்தில்
அற்றை காறுமா விளிந்திடு பூதர்தம் அனிகங்கள்
முற்று மாயிடை வரும்வகை முருகவேள் முன்னுற்றான்
மற்ற வெல்லையில் துஞ்சிய கணமெலாம் வந்துற்ற.

**பொருள் -** மிக்க சினம் கொண்ட அவுணரின் மன்னன் செய்த போரில் அந்நாள் வரைக்கும் இறந்துள்ள பூதர்களின் படைகள் முழுவதும் அந்த இடத்துக்கு வரும்படி முருகப்பெருமான் தம் திருவுள்ளத்தில் நினைத்தார். அப்பெருமான் நினைத்த அப்போதே இறந்த பூதங்கள் எல்லாம் உயிர் பெற்றெழுந்தன.

14. முஞ்சு தானைக ளார்ப்பொடு குழீஇக்குமீஇ முருகேசன்
செஞ்ச ரண்முனம் பணிந்துதம் மினத்தொடும் செறிகின்ற
எஞ்ச லில்லதோ ரெல்லைநீர்ப் புணரியில் எண்ணில்லா
மஞ்சு கான்றிடு நீத்தம்வந் தீண்டிய மரபென்ன.

**பொருள் -** இறந்த பூதகணங்கள் உயிர்பெற்று ஆரவாரத்துடன் கூட்டம் கூட்டமாக நின்று, முருகப்பெருமானின் சிவந்த திருவடிகளை வணங்கிக், கெடாத வளமுடைய நீர்க்கடலில் அளவற்ற மேகங்கள் பொழிந்த வெள்ளநீர் வந்து புகுந்தது போல், தமது இனத்துடன் சென்று நெருங்கின.

*15. கருணை யங்கட லாகியோன் கனைகடற்கு இறையாகும்*
*வருணன் மாமுக நோக்கியே வெய்யசூர் வைகுற்ற*
*முரணு றுந்திறல் மகேந்திர நகரினை முடிவெல்லைத்*
*தரணி யாமென உண்குதி ஒல்லையில் தடிந்தென்றான்.*

**பொருள் -** கருணைக் கடலான குமரக்கடவுள், ஒலியுடைய கடலுக்குத் தலைவனான வருணனின் சிறந்த முகத்தைப் பார்த்து, 'கொடிய சூரபன்மன் இருந்த வன்மையும் திறமும் உடைய மகேந்திரபுரியினை ஊழிக்காலத்துப் பூமியைப் போல விரைவில் அழித்துவிட்டு வருவாயாக!' என்று உரைத்தருளினார்.

*16. என்ற மாத்திரைச் சலபதி விழுமிதென் றிசைவுற்றுத்*
*தன்று பல்லுயிர் தம்மோடு மகேந்திரத் தொல்ஊரை*
*அன்று வன்மைசேர் புணரியுள் அழுத்தினன் அவனிக்கீழ்*
*நின்று மாயவன் அடுவுல குண்டிடு நெறியேபோல்.*

**பொருள் -** என இவ்வாறு அப்பெருமான் உரைத்த அளவில், கடல் மன்னனான வருணன், 'நல்லது' என்று இசைந்து, நெருங்கிய பல வகையான உயிர்களுடனே பழைய மகேந்திர புரியை அந்நாளில் திருமால் பாதலத்தில் நின்று மத்திய உலகத்தை உண்ணும் தன்மை போல, வன்மை பொருந்திய கடலுள் அழுந்துமாறு செய்தான்.

*17. ஆன காலையில் ஆறுமுகன் முகுந்தனும் மலரோனும்*
*வானுளோர்களும் இறைவனும் வழுத்தினர் மருங்காக*
*ஏனைய வீரர்கள் யாவரும் புடைவர இகல்பூதத்*
*தானை ஆர்வத்துடன் சென்றிடச் செருநிலந் தணப்புற்றான்.*

**பொருள் -** அப்போது ஆறுமுகப்பெருமான், திருமாலும் நான்முகனும் தேவர்களும் இந்திரனும் வணங்கியபடி பக்கத்தில் வரவும், மற்ற வீரர்கள் எல்லாம் அருகிலே சூழ்ந்து வரவும், வண்மையுடைய பூதப்படைகள், ஆரவாரம் செய்து கொண்டு உடன் வரவும் போர்க்களத்தினின்று நீங்கியருளினார்.

*18. கலங்கல் கொண்டிரு மகேந்திர வரைப்பினைக் கடந்தேபின்*
*இலங்கை மாநகர் ஒருவியே அளக்கரை யிகந்தேகி*
*நலங்கொள் சீருடைச்செந்தியில் தொல்லைமா நகரெய்தி*
*அலங்கல் அஞ்சுடர் மஞ்ஞைநின் றிழிந்தனன் அயில்வேலோன்*

**பொருள் -** கலங்கிய கடல் நீரால் மூடிக்கொள்ளப்பெற்ற விரமகேந்திரபுரியின் எல்லையைக் கடந்து பின்பு, அதற்குத் தெற்கில் இருந்த சிறந்த இலங்கையையும் கடந்து, கடலையும் நீங்கிப் போய், நன்மை பொருந்திய சிறப்புடைய திருச்செந்தூரை அடைந்து, அசைகின்ற அழகான சுடரையுடைய மயிலினின்றும் வேலை ஏந்திய முருகப்பெருமான் இறங்கியருளினார்.

19. கேக யத்தின்நின் றிழிந்துதொல் சினகரம் கிடைத்திட்டுப்
பாக சாதன னாதியாம் அமரர்கள் பணிந்தேத்த
வாகை சேர் அரித் தவிசின்மேல் வதனமூ விரண்டுள்ள
ஏக நாயகன் உலகருள் கருணையோ டினிதுற்றான்.

**பொருள் -** மயிலினின்றும் இறங்கித் தம் பழைய ஆலயத்தை அடைந்து, இந்திரன் முதலான தேவர்கள் வணங்கித் துதிக்க, வெற்றியுடைய அரியணையின் மீது ஆறு திருமுகங்களையுடைய முருகப்பெருமான் என்ற முழுமுதற் கடவுள் உலகைக் காத்தலான அருள் காரியமாக இனிதே எழுந்தருளியிருந்தார்.

வேறு

20. ஈண்டிது நிகழ்ந்த எல்லை இப்பகல் அவுண ராகி
மாண்டவர் நமர்கள் அன்றே மற்றவர் படிவ முற்றும்
தீண்டினங் கதிர்க்கை யாலுந் தீர்விதற் கிதுவென் பான்போல்
பூண்டகு தடந்தோர் வெய்யோன் புனற்பெருங் கடலுட் புக்கான்.

**பொருள் -** இங்கு இவ்வாறு நடந்த பின்பு, 'இன்று அசுரர்களாகி இறந்தவர் நம்மவர் என்று நாம் அந்த இறந்தவர்களின் உடல் முழுமையும் கதிரான கைகளால் தீண்டினோம். இனி இத்தீட்டு இதனால் ஒழியவேண்டும்' என்று எண்ணியவனைப் போலத் தகுந்த பூண்களையுடைய தேரினையுடைய சூரியன் மிக்க நீரையுடைய கடலில் முழுகினான்.

21. வேலையின் நடுவு புக்கு மேவரும் வடவைச் செந்தீக்
காலம திறுதி யாகக் கடிதெழீஇக் ககன நக்கிப்
பாலுற விர்ந்தி யாண்டும் படர்ந்துகொண் டென்ன வந்தி
மாலையம் பொழுதில் செக்கர் வான்முழு தீண்டிற் றன்றே.

**பொருள் -** கடலின் நடுவிலே புகுந்து, மற்றவரால் அடைய இயலாத வடவைத் தீயானது உலக முடிவு காலமானது நெருங்கி வர, விரைந்து எழுந்து வானை அளாவிப் பக்கங்களில் பரவிப்படர்ந்து எல்லா இடங்களிலும் பரந்து சூழ்ந்து கொண்டதைப் போல் அந்திமாலைப் பொழுதில் செக்கர் வானம் எல்லா இடங்களிலும் பரந்தது.

வேறு

22. அன்னதொரு போழ்துதனில் ஆறிரு தடந்தோள்
முன்னவனை நான்முகவ னேமுதல தேவர்
சென்னிகொடு தாழ்ந்துசிறி யேங்கள் இவ ணுன்தன்
பொன்னடி அருச்சனை புரிந்திடுதும் என்றார்.

**பொருள் -** அப்பொழுது அகன்ற பன்னிரு தோள்களையுடைய முதல்வரான செவ்வேளை நான்முகன் முதலான தேவர்கள் தலையால் வணங்கி, 'இறைவனே! நாங்கள் உம் பொன் போன்ற அடிகளை இங்குப் பூசை செய்கின்றோம்' என்று உடைத்தனர்.

23. என்றுரைசெய் காலைஎமை யாளுடைய அண்ணல்
நன்றென இசைந்திட நறைக்கொள்புனல் சாந்தத்
துன்றுமலர் தீபம்அவி தூப முதலெல்லாம்
அன்றொரு கணத்தின்முன் அழைத்தனர்கள்அங்ஙன்.

**பொருள் -** என்று தேவர்கள் சொன்னபோது, எம்மை ஆளாகவுடைய இறைவன் 'நல்லது, அவ்வாறே செய்யுங்கள்!' என்று உரைக்கவும், அவர்கள் அப்போது ஓர் இமைப்போதில் மணமுடைய நீர், சந்தனம், மலர், தீபம், அவி, தூபம் முதலிய பொருள்கள் அனைத்தையும் கொணரச் செய்தனர்.

24. எந்தையும்தேர்ந்திட இயம்பிய குமார
தந்திர நெறிப்படி தவாதறு முகற்கு
முந்திய குடங்கர்முதல் மூவகை இடத்தும்
புந்திமகிழ் பூசனை புரிந்தனர் பரிந்தே.

**பொருள் -** எம்பெருமான் உமையம்மையார் உணரும் படி, கூறியருளிய குமார தந்திர நூற்படி, தவறுதல் இல்லாமல் ஆறுமுகப்பெருமானுக்கு முற்பட்ட கும்பம், அக்கினி, உருவம் என்ற மூவகையான இடங்களிலும் பூசை செய்தனர்.

25. எஞ்சலில் அருச்சனை இயற்றி இணைஇல்லோன்
செஞ்சரணி னைத்தமது சென்னிகொடு தாழா
அஞ்சலிசெய் தேதிடலும் ஆங்க வரைநோக்கி
நெஞ்சுறு மகிழ்ச்சியொடு நீட ருள் புரிந்தான்.

**பொருள் -** தேவர்கள் அங்ஙனம், குறைவற்ற அருச்சனையைச் செய்த பின்னர், ஒப்பில்லாத அந்தப்பெருமானின் திருவடிகளைத் தலையால் வணங்கி, அஞ்சலிசெய்து துதித்தனர். துதிக்கவும், அவர்களைப் பார்த்துத் திருவுள்ளத்தில் ஏற்பட்ட களிப்புடனே மிக்க அருள் புரிந்தார்.

*26. நீண்டவருள் செய்திடு நெடுந்தகை நுமக்கு*
*வேண்டுகுறை உண்டெனின் விளம்புதிர்கள் என்னக்*
*காண்டகைய சூர்முதல் களைந்தெமை அளித்தாய்*
*ஈண்டுனருள் பெற்றன மியாதுகுறை மாதோ.*

**பொருள் -** மிக்க அருளைச் செய்த பெருந்தகுதியுடைய அம்முருகப்பெருமான், அவர்களைப் பார்த்து, 'உங்கட்கு ஏதேனும் குறையிருந்தால் அதைத் தெரிவியுங்கள்!' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதற்கு அவர்கள், எம் இறைவ, கொடுமையுடைய சூரனான முதல்வனை அழித்து எம்மவர்களைக் காத்தீர். அன்றியும் இப்போது இங்கு உம் அருளைப் பெற்றோம். அதனால் எங்கட்கு என்ன குறையுளது ?

*27. ஒன்றினி அளிப்பதுள துன்னடியம் யாக்கை*
*நின்றிடு பகல்துணையும் நின்னிரு கழற்கண்*
*மன்றதலை யன்புற வரந்தருதி எந்தாய்*
*என்றிடலும் நன்றென இரங்கியருள் செய்தான்.*

**பொருள் -** 'எம் கடவுளே, நீவீர் எங்களுக்கு அளிக்கத் தக்க வரம் ஒன்று உண்டு. அது யாது என்றால், உம் அடியவரான எங்களின் உடல் இருக்கும் வரை உம் திருவடிகளில் சிறந்த அன்பு இருக்குமாறு வரம் தந்தருள வேண்டும்.' என வேண்டினார். உடனே, எம் இறைவன், 'அவ்வாறே ஆகுக' என்றருள் செய்தார்.

*28. மலரய னாதியாம் வரம்பி லோரெலாம்*
*பலர் புகழ் குமரனைப் பரவி வைகினார்*
*உலகினில் யாரையும் ஒறுத்த தானவர்*
*குலமென மாய்ந்தது கொடிய கங்குலே.*

**பொருள் -** நான்முகன் முதலான எண்ணற்ற தேவர்கள் எல்லாரும், பலரும் புகழும் செவ்வேளை வணங்கி இருந்தனர். உலகத்தில் உள்ள எல்லாரையும் வருத்திய அசுரர் குலம் அழிந்தாற் போலக் கொடிய இரவு நீங்கியது.

*29.* *கங்குலும் தாரகா கணமும் மாய்ந்திடப்*
*பொங்கொளி வீசியே பொருளில் ஆதவன்*
*இங்குள வுலகெலாம் ஈறு செய்திடுஞ்*
*சங்கர னாமெனத் தமியன் தோன்றினான்.*

**பொருள் -** இரவும், இரவில் விளங்கிய விண்மீன்களும் ஒழிய கதிரவன், விளங்கும் ஒளிக்கதிர்களை வீசிக்கொண்டு, இவ்விடத்தில் உள்ள உலகங்களை அழிக்கின்ற உருத்திரரான சிவபெருமானைப் போலத் தனியாகத் தோன்றினான்.

*30.* *குணதிசை அமர்புரி கொடியர் உய்த்திடும்*
*கணையென விரிகதிர் காட்டி அங்கவை*
*அணைதலுங் குருதிநீர் அடைந்த தன்மைபோல்*
*இணையறு செக்கர்பெற் றிரவி தோன்றினான்.*

**பொருள் -** கிழக்குத் திக்கில் போர் செய்கின்ற கொடிய ஊந்தேயர் எய்த அம்புகளைப் போல் விரிந்த கதிர்களைக் காட்டி, அந்த அம்புகள் வந்து பட்டவுடனே இரத்த வெள்ளம் பெருகி வரும் தன்மையைப் போல ஒப்பில்லாத சிவந்த ஒளியுடையவனாகிக் கதிரவன் உதயம் ஆனான்.

*31.* *அப்பொழு தவ்விடை அமரர் கம்மியன்*
*கைப்படு செய்கையாற் கந்த வேள்ஒரு*
*செப்பரு நிகேதனஞ் செய்வித் தீசனை*
*வைப்புறு தாணுவில் வருவித் தானரோ.*

**பொருள் -** அங்கு அச்சமயத்தில் தேவதச்சன் கையினால் இயற்றிய வேலைப்பாட்டினால் ஒரு கோயிலை முருகப் பெருமான் அமைப்பித்து, அதில் சிவ பெருமானை, நிலை நிறுத்தப்பட்ட லிங்க வடிவமாகத் தாபித்தனன்.

*32.* *ஆமயம் முதலிய ஐந்து கந்திகள்*
*மாமலர் மஞ்சனம் அமிர்தம் வான்துகில்*
*தூமணி விளக்கொடு தூபம் கண்ணடி*
*சாமரை ஆதிகள் அமரர் தந்திட.*

**பொருள் -** கோமயம் முதலான பஞ்ச கவ்வியங்களையும், மணப் பொருள்களையும் சிறந்த மலர்களையும், திருமஞ்சனத்தையும், அமிழ்தத்தையும், உயர்ந்த ஆடைகளையும், தூய்மையான மணியினையும், தீப தூபங்களையும், கண்ணாடி வெண்சாமரம் முதலியவற்றையும் தேவர்கள் கொண்டு வந்து தர,

*33. முழுதொருங் குணர்ந்திடு முருகன் யாவரும்*
*தொழுதகும் இறைவனூல் தொடர்பு நாடியே*
*விழுமிய கண்ணுதல் விமலன் தாள்மலர்*
*வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால்.*

**பொருள்** - முற்றிய அறிவையுடைய முருகப்பெருமான், யாவராலும் தொழத்தக்க சைவாகம முறையை ஆராய்ந்து உயர்ந்த மூன்று விழிகளையுடைய சிவபெருமானின் திருவடி மலர்களை, மனத்தில் பொருந்திய அன்பால் பூசை செய்தார்.

## «m]¨ £h»®

வேலாயுதக் கடவுள் வீரவாகுதேவரை அன்புடன் நோக்கி 'வீரனே, இந்திர குமாரனாகிய சயந்தனையும், தேவர்களையும் சிறையினின்றும் மீட்டுக்கொண்டு வருவாய்' என்று அருளினார். வீரவாகுதேவர் சிறைச்சாலையை அடைந்தார். சிறையிலிருந்த தேவர்கள் அரம்பையர் ஆகியோரின் கால்களிற்பட்ட விலங்குகள் தாமே தெறித்து ஒடிந்தன. எம் பெருமான் அசுரரை வென்ற சுபச்செய்தியை அமரர்கள் கேட்டு ஆனந்தித்தனர். அனைவரும் போர்க்களத்தை அடைந்து குமாரக் கடவுளை வலம் வந்து வணங்கினர்.

சயந்தன் தனது பிதாவாகிய இந்திரனை வணங்கினான். இந்திரன் சயந்தனை எடுத்துத் தழுவி இன்புற்றான். சூரபன்மனுடன் செய்த சமரில் அமரர் புறமிருந்து இறந்த பூதர்கள் அனைவரும் எழுந்து வருமாறு திருவுளங் கொண்டார். இறந்த பூதகணங்கள் யாவரும் உயிர் பெற்று எழுந்து வந்து கூடி, குமாரக் கடவுள் சந்நிதியை அடைந்து அவரை வணங்கின. வடிவேலண்ணல் வருணபகவானை அழைத்து 'நாம் பண்டு இறங்கி இருந்த இலங்கை தவிர விரமகேந்திரபுரியையும் அவுணரின் ஏழு தீவுகளையும் அழித்து விடுக' என்று கூறியருளினார். வருணன் உடனே வீரமகேந்திர புரியையும் துவீபங்களையும் கடலினுட் கொண்டான்.

அரி, அயனாதி அமரர்களும் இலக்கத்தொன்பது வீரர்களும் துதி செய்து மருங்கில் வர, முருகப் பெருமான் போர்க்களம் நீங்கி, இலங்கையையும் கடலையும் கடந்து ஜயந்தி மலை என்கின்ற சிறப்பு மிக்க செந்திற்பதியை யடைந்தார். மயில் வாகனத்தினின்றும் இறங்கிக் கோயிலினுள் புகுந்தார். தேவர்கள் துதிக்க, எல்லா உயிர்கட்கும் அருள் புரியும் பெருங்கருணையுடன் திவ்விய சிங்காசனத்தின் மீது இனிது வீற்றிருந்தருளினார். அப்போது சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்.

தேவர்கள் முருகப் பெருமானுடைய உத்தரவுப்படி, திருமஞ்சனத்துக்காக, நறுமலர், சந்தனம், தூபம், தீபம் முதலியவைகளைக் கொண்டுவந்தார்கள். முருகப் பெருமானுக்குத் தாங்கள் பூஜை செய்யப் போகிறோம் என்ற ஆனந்தம் அவர்களுக்கு. ஆனால் எளிமையிற் சிறந்த ஏந்தலோ தாம் பூஜை பெறும் தெய்வமாயிராமல் பூஜை புரியும் தெய்வமாயிருக்க விரும்பினார். எனவே, முருகப்பெருமான் செந்திற்பதியில் தேவதச்சனைக் கொண்டு ஓர் அழகிய திருக்கோயில் நிறுவச் செய்து, அக்கோயிலில் சிவலிங்கம் வைத்து அன்புடன் வழிபட்டார். ஒவ்வொரு மலராக அர்ச்சித்துக் கொண்டே வந்தார். அந்த அர்ச்சனையில் அகம் கரைந்த மால், அயன், பிரம்மா முதலிய தேவர்கள் கடைசி அர்ச்சனையின் போது பரவசப்பட்டு, 'முருகா' என்று கூவினார். அப்போது கையிலெடுத்த பூவுடன் திரும்பிக் காட்சி கொடுத்தார் கந்தப் பெருமான். திருச்செந்தூரில் இன்னமும் இப்படித்தான் ஒரு கரத்தில் அர்ச்சனை மலர் கொண்டவராக சுவாமியின் கோலம் இருக்கிறது. பெரியவர்களைப் பூஜையில் காண்பது மற்ற சந்தர்ப்பங்களில் காண்பதைக் காட்டிலும் பெருமை. ஆகவே, மற்றக் கோயில்களில் உள்ள சுவாமியை விடத் திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமானுக்குப் பெருமை அதிகம்.

பூஜை புரிந்த பெருமான் பிறகு தேவர்களின் பூஜையைத் தாமும் பெற்றார். 'உங்களுக்கு இன்னமும் ஏதேனும் குறைகள் இருந்தால் கூறி, வேண்டிய வரங்களைக் கேட்டு உய்வு பெறுங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். 'எம்பெருமானே, அடியேங்கட்கு இனி ஒரு குறைவும் இல்லை. தங்கள் திருவடியில் நீங்காத அன்பைத் தந்தருள வேண்டும்' என்று தேவர்கள் வேண்டிக்கொண்டார்கள். ஆறுமுகவள்ளல் அவ்வரத்தை நல்கினார். அன்றைய இரவு கழிய, கதிரவன் கீழ் வானில் உதயமானான்.

### பாடச் சுருக்கம்

கந்தபுராண மீட்சிப்படலம் யுத்த காண்டத்தில் வருவதாகும்.

மீட்சிப் படலத்தில் தேவர்கள் சிறை மீண்ட செய்திகள் கூறப்பட்டுள்ளன.

திருச்செந்தூரில் சிவலிங்கம் அமைத்து முருகன் பூசை செய்யும் காட்சி அற்புதமானது.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கந்தபுராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் யார்?
2. கந்தபுராண மீட்சிப்படலம் எந்தக் காண்டத்தில் வருகின்றது?
3. கந்தபுராண மீட்சிப்படலத்தில் வரும் பாத்திரங்கள் சிலவற்றைத் தருக.
4. கந்தபுராண மீட்சிப்படலத்தில் சிவலிங்கத்திற்கு முருகன் மலர் கொண்டு பூசை செய்யும் காட்சியை எத்தலத்தில் காணலாம்?
5. கந்தபுராண மீட்சிப்படலத்தின் மூலம் நீர் கற்றுக்கொண்ட உண்மை யாது?

## செயற்பாடு

கந்தபுராண மீட்சிப்படலத்தை இரு குழுக்களாகப் பிரிந்து, ஆசிரியர் உதவியுடன் நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.